## 2.110 தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வரம்புக்கு உட்பட்ட பணியிடங்களில் கருணை அடிப்படையில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்படுபவர்களை முறையாக பணியமர்த்துவதில் ஏற்படும் காலதாமதம் மற்றும் முறைகேடுகள் – தவிர்க்கப்படுவதற்கான வழிமுறைகள்

ஊரக வளர்ச்சி (இ5) துறை

அரசாணை (நிலை) எண். 191 நாள் : 10.06.1997

படிக்க :

ஊரக வளர்ச்சி துறை அரசாணை எண் 164 நாள் 07.08.1996

**ஆணை**

கருணை அடிப்படையில் நியமனம் பெற்றவர்களது பணி வரன் முறை வருடக் கணக்கில் நிலுவையில் உள்ளதாக அரசின் கவனத்திற்கு பல்வேறு முறையீடுகள் வந்துள்ளன. அரசு இது குறித்து ஆய்வு செய்தது.

2. பணியில் இருக்கும்போது காலமான அரசு / ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் வாரிசுகளை, கருணையின் அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வரம்பிற்குட்பட்ட பணியிடங்களில் பணியமர்த்தும் திட்டப்படி காலமான பணியாளரின் குடும்பம் வறிய நிலையில் இருந்தால் அக்குடும்பத்திற்கு உடனடி உதவி கிடைக்க வேண்டும் என்பதற்காக அக்குடும்பத்தில் ஒருவரை நியமன அலுவலரே தற்காலிகமாக பணியமர்த்திவிட்டு பின்னர் தேர்வாணையத்தின் இசைவினை பெற்று முறையாக பணி அமர்த்தும் வகையில் நியமன விதிமுறைகள் உரிய வகையில் தளர்வு செய்யப்பட்டுள்ளன. ஒதுக்கீடு தொடர்பான விதிகளில் இருந்தும் பொது விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தற்காலிகமாக பணி அமர்த்திய பின் தேர்வாணையத்தின் இசைவினை பெறுவதற்கு தேர்வாணைய வரம்பிற்குட்பட்ட பணியிடங்களுக்கு பணியாளர் தேர்வு குறித்து தேர்வாணையத்துடன் அரசு அளவில் தொடர்பு கொள்ள வேண்டும் என்ற நடைமுறைக்கேற்ப, இதற்கான முன்மொழிவுகளை அரசு தேர்வாணையத்தின் அனுப்பி இசைவு பெறும் நடைமுறையை மாற்ற இயலாது.

3. ஏற்கனவே 23.12.1993 நாளிட்ட வேலை வாய்ப்புத்துறை கடித (நிலை) எண் 114 மற்றும் 09.10.1991 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை கடித (நிலை) எண் 282 ஆகியவற்றில் கருணை அடிப்படையில் தற்காலிக பணி நியமனம் அளிக்கப்பட்ட உடனேயே சம்பந்தப்பட்ட நபரின் பணியினை வரன்முறை செய்ய உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு அரசிற்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட வேண்டும் என்று அறிவுரைகள் வழங்கப்பட்டும் கூட தேர்வாணையத்தின் இசைவு பெறுவதற்காக அரசுக்கு வரப்பெறும் முன்மொழிவுகளை ஆய்ந்து பார்க்கும்போது பெரும்பாலான நிகழ்வுகளில் முன்மொழிவுகள் பல ஆண்டுகள் கடந்த பின்னர் தான் அரசுக்கு அனுப்பப்படுகின்றன என்பதும் அப்படி வரப்பெறும் முன்மொழிவுகளும் முழு விபரங்களை கொண்டதாக அமையவில்லை என்பதும் கண்கூடாகத் தெரிகிறது. முன்மொழிவுகள் முழுமையான விபரங்களை கொண்டிராததால் அரசு தெளிவுரைகளும் கூடுதல் விபரங்களும் கேட்க வேண்டியுள்ள நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. மேலும் அரசு கூறும் தெளிவுரைகளும், கூடுதல் விபரங்களும் உடனடியாக அரசுக்கு கிடைக்கப் பெறுவதில்லை. பல நிகழ்வுகளில் வருமானச் சான்று, சொத்துச் சான்று, குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்பதற்கான சான்று போன்ற முக்கிய சான்றுகள் பெற்று ஆய்வு செய்து நியமனம் அளிக்க வேண்டிய நியமன அலுவலர்கள், இச்சான்றுகளை நியமனத்திகு பின்னரே பெற்று பணிவரன் முறைக்காக அரசுக்கு அனுப்புகின்றனர். இச்சான்றுகளைப் பெற்று ஆய்வு செய்யாது நியமனம் செய்வது, எவ்வாறு கருணை அடிப்படையிலான வகை நியமனம் எனக் கருத முடியும். அவை முறையற்ற நியமனங்களே ஆகும். வேறு வகை விதி மீறல்களும் நடைமுறையில் உள்ளன. பணியில் இருக்கும்போது காலமானவர் குடும்பம் உண்மையிலேயே வறிய நிலையில் இருந்தால் இறந்த அரசு ஊழியரின் மனைவி வேலை கோருவார் அல்லது பள்ளி இறுதி வகுப்பு வரை படித்துள்ள மகன் / மணமாகாத மகளுக்கு வேலை கோருவார். ஏனெனில் பள்ளியிறுதி வகுப்பு தேர்ச்சியே இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் பெறப் போதிய கல்வித் தகுதி ஆகும். அவ்வாறில்லாமல் மேல்நிலை கல்வி படித்து அதன்பின்னர் பட்டப்படிப்பு போன்ற உயர்கல்வி முடித்து அரசு ஊழியர் இறந்து பல ஆண்டுகள் கழித்து பணி வாய்ப்பு கோரியவர்களுக்கும் நியமனம் அளித்துள்ள நிகழ்வுகள் பல உள்ளன. பல நிகழ்வுகளில் எந்த நாளில் நியமனம் கோரி விண்ணப்பிக்கப்ட்டது என்பதற்கான ஆதாரம் கூட அனுப்பப்படுவது இல்லை. இதுபோன்ற அரசு ஊழியர் இறந்து பல ஆண்டுகள் கழித்து பணி நியமனம் கோரும் இறந்த அரசு ஊழியரின் வாரிசுகளுக்கு இனிமேல்அரசின் அனுமதி பெற்ற பின்னரே பணி நியமனம் வழங்கப்பட வேண்டும். மேலும் இறந்த அரசு மூத்த ஊழியரின் மகன் / மகள் எவரேனும் அவர் இறக்கும் முன்னரே அரசு / தனியார் துறையில் நிரந்தர பணியில் பணிபுரிந்து வந்து அரசு ஊழியர் இறக்கும்போது மணமாகாமல் இருந்தால், அவரால் அக்குடும்பத்திற்கு உதவி கிடைத்து வருகின்றது என்றுதான் கருத வேண்டுமொழிய அவரால் குடும்பத்திற்கு எவ்வித

உதவியும் இல்லையென்று மற்றொருவருக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடாது. இத்தகைய இனங்களில் ஏதேனும் சந்தேகம் இருப்பின் அரசின் தெளிவுரை பெற்ற பின்னரே நியமனம் அளிக்க வேண்டும்.

**4.** மேற்குறிப்பிட்ட நிலையில், தேர்வாணைய வரம்புக்கு உட்பட்ட பதவிகளில், கருணையின் அடிப்படையில் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டவர்களை முறையாக பணி அமர்த்துவதில், இனி வருங்காலங்களில் கால தாமதத்தை தவிர்க்கும்பொருட்டு அரசு கீழ்க்கண்ட ஆணைகளை பிறப்பிக்கின்றது.

அ. கருணையின் அடிப்படையில், பணி வாய்ப்பு கோரி விண்ணப்பங்கள் வரப்பெற்றால், தற்காலிக நியமனம் அளித்து ஆணையிடும் முன்னரே, விதிமுறைகள் படி தேவையான சான்றுகள், உறுதிமொழி போன்ற யாவையும் பெற்று ஆய்வு செய்து, அதன் பின்னரே நியமன ஆணைகள் வெளியிட வேண்டும். பத்தி 3ல் குறிப்பிட்டுள்ளது போன்ற குறைபாடுகள் நிகழா வண்ணம் நியமன அலுவலர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆ. தேர்வாணைய வரம்புக்கு உட்பட்ட பதவிகளில் யாரேனும் கருணையின் அடிப்படையில் பணி வாய்ப்பு வழங்கும் திட்டப்படி, தற்காலிகமாக பணியமர்த்தி ஆணையிட்டால் அப்படி ஆணையிடும் நியமன அலுவலர், ஆணையிட்ட ஒரு மாத காலத்திற்குள் முறையாக பணி அமர்த்துவதற்கு, தேர்வாணையத்தின் இசைவு பெறுவதற்கான முன்மொழிவை, முழு விபரங்களுடன் அரசுக்கு ஊரக வளர்ச்சி இயக்குநர் வழியாக அனுப்ப வேண்டும். கால தாமதம் ஏற்பட்டால் அதற்கு பொறுப்பானவர்கள் மீது உடனடியாக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இ. ஒவ்வொரு மாதமும் எத்தனை நபர்கள் கருணையின் அடிப்படையில் தேர்வாணைய வரம்புக்கு உட்பட்ட பதவியில் தற்காலிக பணியில் அமர்த்தப்பட்டனர். அவர்களின் முறையாக பணியமர்த்துவதற்கான முன்மொழிவு குறித்த காலத்தில் வரப்பெற்றதா விதிமுறைகள் சரியாக கடைபிடிக்கப்பட்டுள்ளதா என்பதை ஊரக வளர்ச்சி இயக்குநர் கண்காணிக்க வேண்டும். இதன் பொருட்டு, காலமுறை அறிக்கை நிர்ணயித்து அவர் ஆய்வு செய்யலாம். கால தாமதம் மற்றும் முறைகேடுகள் காணப்பட்டால் உடனே பொறுப்பு நிர்ணயித்து ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள அவர் அறிவுரை வழங்க வேண்டும்.

ஈ. ஒவ்வொரு ஆண்டும் தேர்வாணைய வரம்புக்கு உட்பட்ட பதவிகளில் எத்தனை கருணை அடிப்படையிலான நியமனங்கள் செய்யப்பட்டன; அவை அனைத்துக்கும் முறையாக பணியமர்த்துவதற்கான முன்மொழிவு அரசுக்கு குறித்த காலத்தில் அனுப்பப்பட்டதா ; காலதாமதம், முறைகேடுகள் ஏதேனும் நிகழ்வுகளில் காணப்பட்டதா! அதன் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளபட்டதா! அதன்விளைவு என்ன என்பன போன்ற மாவட்ட வாரி விபரங்களுடன் ஆண்டறிக்கை ஒன்றை, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 31க்குள் ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு அனுப்ப வேண்டும்.

உ. கால தாமதத்துடன் அனுப்பப்படும் முன்மொழிவுகளுடன் அதற்கு பொறுப்பானவர்கள் யார் அவர்கள் மீது மேற்கொண்ட ஒழுங்கு நடவடிக்கை என்ன போன்ற விபரங்களையும் முன் மொழிவுகளுடன் சேர்த்து அரசுக்கு அனுப்ப வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். நாராயண்**
அரசு செயலாளர்